தினத்தந்தி

விழாவில் ஈஷா யோகா மைய நிறுவனர் சத்குரு ஜக்கிவாசுதேவ், பஞ்சாப் கவர்னர் வி.பி.சிங் பத்நோர், மத்திய சுற்றுச்சூழல்துறை மந்திரி ஹர்சவர்த்தன், முன்னாள் கிரிக்கெட் வீரர் ஷேவாக், அமைச்சர் எஸ்.பி.வேலுமணி உள்பட பலர் நதிகளை பாதுகாக்க வலியுறுத்தி விழிப்புணர்வு பதாகைகளை கைகளில் ஏந்தி நின்றிருந்த காட்சி.

ஈஷா யோகா மையம் சார்பில்

நதிகளை காக்க வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி

பஞ்சாப் கவர்னர், மத்திய மந்திரி தொடங்கி வைத்தனர்

கோவை,செப்.4– கோவையில் ஈஷா யோகா மையம் சார்பில் நதிகளை காக்க வலியுறுத்தி நடந்த விழிப்புணர்வு பேரணியை பஞ்சாப் கவர்னர் மற்றும் மத்திய மந்திரி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

விழாவில் கலந்து கொண்ட பொதுமக்கள் கூட்டத்தின் ஒரு பகுதியை படத்தில் காணலாம்.

விழிப்புணர்வு பேரணி

நமது நாட்டில் வறண்டு வரும் நதிகளை காப்பாற்றி, அதன் நீரோட்டத்தை அதிகரிக்க ஈஷா யோகா மையம் சார்பில் 'நதிகளை மீட்போம்' என்ற விழிப்புணர்வு இயக்கம் தொடங்கப்பட்டு உள்ளது. இதற்காக நாடு முழுவதும் விழிப்புணர்வு பேரணி நடைபெறுகிறது. பேரணியின் தொடக்க விழா நேற்று மாலை 4 மணிக்கு கோவை வ.உ.சி. மைதானத்தில் நடந்தது. ஈஷா யோகா மைய நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் தலைமை தாங்கினார். பஞ்சாப் கவர்னர் வி.பி.சிங் பத்நோர், மத்திய சுற்றுச்சூழல்துறை மந்திரி ஹர்சவர்த்தன் ஆகியோர் கலந்து கொண்டு, பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தனர். மத்திய மந்திரி ஹர்சவர்த்தன் பேசும்போது கூறியதாவது:–

பொதுமக்களின் பங்கு

நமது நதிகளை பாதுகாக்க ஒரு பேரணி தேவைப்படும் அளவுக்கு நாம் கவனமே இல்லாமல் வாழ்ந்து வருகிறோம். கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு அனைத்து ஆறுகளிலும் தண்ணீர் ஓடிக்கொண்டு இருந்தது. ஆனால் இப்போது அதன் நிலை மாறி உள்ளது. எனவே மீண்டும் பழைய நிலையை கொண்டு வர வேண்டிய கடமை அனைவருக்கும் இருக்கிறது.

பல ஆயிரம் வருடங்களாக நமக்குள் ஊறி இருக்கும் சுற்றுச்சூழல் குறித்த அக்கறையை புதுப்பிப்பதே எதிர்கால சந்ததியினருக்கு நாம் வழங்கக்கூடிய மிகப்பெரிய பரிசு ஆகும். இந்த இயக்கத்தின் நோக்கம் வெற்றி பெற பொதுமக்கள் அனைவரும் தங்கள் பங்கை ஆற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

முன்னாள் கிரிக்கெட் வீரர் ஷேவாக் பேசும் போது கூறியதாவது:–

செழிப்பாக இருந்தது

நான் கடந்த 1978–ம் ஆண்டில் பிறந்தேன். அப்போது அனைத்து ஆறுகளிலும் தண்ணீர் ஓடிக்கொண்டு இருந்தது. இதனால் எங்கு பார்த்தாலும் செழிப்பாக இருந்தது. ஆனால் தற்போது அப்படி இல்லை. எனவே நதிகளை பாதுகாப்பதை நமது கடமையாக நினைக்க வேண்டும். நாம் நதிகளை பாதுகாத்தால்தான் அடுத்த தலைமுறையினருக்கு அதன் பயன் கிடைக்கும்.

எனவே நான் பிறக்கும் போது நதிகள் எப்படி இருந்ததோ அதுபோன்று எனது கடைசி காலத்துக்குள் நதிகளை மாற்ற வேண்டும் என்பதே எனது ஆசை ஆகும். அனைத்து மக்களுக்கும் நதிகளை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், நதிகளில் தண்ணீர் ஓட வைத்துவிடலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

துணையாக இருக்க வேண்டும்

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி கேப்டன் மிதாலிராஜ் பேசும்போது, நமது நாட்டின் கலாசாரம் நதிகளோடு சேர்ந்து இருந்தது. நதிகளோடு சேர்ந்து முன்னோர்கள் வாழ்ந்து வந்தனர். தற்போது அது மாறி வருகிறது. அடுத்த தலைமுறையினர் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்படுவதை தடுக்க நதிகளை பாதுகாக்க வேண்டும் என்றார்.

பிரபல கார் பந்தய வீரர் நரேன் கார்த்திகேயன் கூறும் போது, 'நதிகளை பாதுகாக்கும் எண்ணம் அனைவருக்கும் ஏற்பட்டுவிட்டால் ஆறுகள் அழியாது. நதிகளை பாதுகாக்க நான் எப்போதுமே துணையாக இருப்பேன்' என்றார்.

2–ந் தேதி டெல்லியில் முடிகிறது

அதன் பிறகு விழிப்புணர்வு பேரணி தொடங்கியது. சத்குரு ஜக்கி வாசுதேவ் வாகனத்தை ஓட்ட, முன்புறத்தில் ஷேவாக் அமர்ந்து இருந்தார். இந்த பேரணி 16 மாநிலங்கள் வழியாக செல்கிறது. இதில் அவர் 7 ஆயிரம் கி.மீ. தூரம் வாகனத்தை ஓட்டிச்செல்கிறார். செல்லும் வழியில் முக்கிய இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடக்கிறது.

அடுத்த மாதம் (அக்டோபர்) 2–ந் தேதி டெல்லியில் பேரணி முடிவடைகிறது. அங்கு நடக்கும் விழாவில் ஏராளமானோர் பங்கேற்கிறார்கள். கோவையில் நடந்த தொடக்க விழா நிகழ்ச்சியில் தமிழக நகராட்சி நிர்வாகம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, ஏ.பி.நாகராஜன் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் அம்மன் அர்ச்சுனன், வி.சி.ஆறுக்குட்டி, கலெக்டர் ஹரிகரன், வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக முக்கிய பிரமுகர்கள் நதிகளை காக்க வலியுறுத்தி பதாகைகளை கைகளில் ஏந்தி நின்று, விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

ஆறுகளை பாதுகாத்தால்தான் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய முடியும்

சத்குரு ஜக்கி வாசுதேவ் பேச்சு

ஆறுகளை பாதுகாத்தால் தான் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய முடியும் என்று சத்குரு ஜக்கி வாசுதேவ் கூறினார்.

வறட்சிதான் காரணம்

நதிகளை காக்க வலியுறுத்தி கோவையில் நடந்த விழிப்புணர்வு பேரணி தொடக்க விழாவில் ஈஷா யோகா மைய நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் பேசும்போது கூறியதாவது:–

கடந்த 12 ஆண்டுகளில் 3 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து உள்ளனர். விவசாய பொருட்களின் விலை குறைவு, வங்கி கடன் ஆகியவை மட்டுமே காரணம் இல்லை. வறட்சிதான் முக்கிய காரணம். நமது நாட்டில் ஒரு இடத்தில் மழையால் அழிவும், மற்றொரு இடத்தில் மழை இல்லாததால் வறட்சி என்ற நிலைதான் உள்ளது. ஆறுகளை பாதுகாத்தால்தான் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய முடியும். நமது நாட்டில் உள்ள ஆறுகளில் ஏராளமான உயிரினங்கள் இருந்தது. ஆயிரம் வகைகளுக்கு அதிகமாக மீன்கள் இருந்தன. தற்போது அவைகள் இருக்கிறதா என்றால் கேள்விக்குறிதான்.

மண்வளம்

நதிகள் பாதுகாக்கப்படாததால் விவசாயம் குறைந்து வருகிறது. இந்த நிலை நீடித்தால் தற்போது விவசாயம் செய்து வரும் அளவில் இருந்து 60 சதவீதம் குறைந்துவிடும். விரைவில் பாலைவனமாகவும் வாய்ப்பு உள்ளது. எனவே அதை தடுக்க நாம் நதிகளை பாதுகாக்க வேண்டும். அதற்காக 2 வகையில் மண் வளத்தை பாதுகாக்கலாம். மரங்களை அதிகமாக வளர்ப்பது, அதன் மூலம் விலங்குகளின் கழிவுகளை மண்ணில் சேர வைப்பது. அப்படி செய்தால் நீர் வளமும், மண் வளமும் அதிகரிக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.